**24.03.2026** **STC 80/2018** **PW1. செந்தில்குமார்**

கடந்த 02.03.2026–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சி இன்று குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 24.03.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், எனது நண்பர் மூலம் அறிமுகமானவர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் Network Marketting என்ற தொழிலை என்னுடன் சேர்ந்து செய்து வந்தார் என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்படி தொழில் சம்மந்தமாக தான் என்னிடம் இருந்து பணம் வாங்கினார் என்றால், பணம் வாங்கிய காரணம் குறித்து எனக்குத் தெரியாது.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் 6 ஆயிரம் ரூபாய் தான் வாங்கியிருந்தார் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் நண்பர் மூலம் என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் கையெழுத்திட்டு நிரப்பப்படாத காசோலை தான் என்னிடம் கொடுத்தார் என்றால், இல்லை. நிரப்பி கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார்.

3. காசோலையில் நிரப்பப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து கைரேகை நிபுணருக்கு அனுப்பினால் உண்மை துலங்கும் என்றால், அனுப்பலாம். அது குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் 6 ஆயிரம் ரூபாய் தான் கடன் வாங்கியிருந்தார் என்றாலும், நான் பொய்யாக அதிக ரூபாய் நிரப்பி காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.